2

Director of Municipal Administration
1 6 AUG 2010
Chepauk, Chennai-600 005.

## சுருக்கம்

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கு பில்லூர் நீர்த்தேக்கத்தினை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு – அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை

அரசாணை (நிலை) எண்:162

நாள்: 11.8.2010
ஆடி 26 திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது :

(1) அரசாணை (நிலை) எண்.160,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.4.2007.

மீண்டும் படிக்கப்பட்டது :

(2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். கோ.5026/பில்லூர் II/உபொ8/திபோபி/2007, நாள் 19.7.2010.

---

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கோயம்புத்தூர் மாநகராட்சி, பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகளுக்கு பில்லூர் நீர்த் தேக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டு, 1995ம் ஆண்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டது என்றும் கோவை மாநகராட்சியின் பெருகி வரும் மக்களின் குடிநீர் தேவையினை கருத்திற்கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி, பில்லூர் அணையினை நீராதாரமாகக் கொண்டு தனிக் குடிநீர் திட்டம் நாளொன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதென்றும், இத்திட்டத்தின் பணிகள் கோவை மாநகராட்சி மூலம் தற்பொழுது நடைபெற்று வருகின்றனவென்றும், ஏற்கெனவே கோவை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டு வரும் நாளொன்றிற்கு 65.97 மில்லியன் லிட்டர் குடிநீரை பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள், ஏற்கனவே பயனில் உள்ள ஊரகக் குடியிருப்புகளுடன் ஆற்று நீர் குடிநீர் வசதி பெறாத கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள புதிய 442 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் புதிய குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் 2006-07-ம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேலாண்மை இயக்குநர் தனது இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு 131.25 மில்லியன் லிட்டர் (தூய நீர் 125 மில்லியன் லிட்டர்) குடிநீர் எடுப்பதற்கு ரூ.210 கோடியில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதென்றும், மேற்கூறிய திட்டத்திற்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதியிலிருந்து ரூ.80.96 கோடிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதென்றும், இவற்றில் ரூ.11.66 கோடி வட்டியில்லா கடனும், ரூ.19.86 கோடி நகர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பும் உள்ளடங்குமென்றும், இத்திட்டத்தில் ஊரக குடியிருப்புகளின் உட்கட்டமைப்புகளுக்காக ரூ.90.63 கோடிக்கு 26.5.2010 அன்று நடைபெற்ற வாரியக் கூட்ட தீர்மான எண்.2.20–ன் மூலம் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுமத்தின் மூலம் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

3. வாரியத்தில் 11.6.2010 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் இத்திட்டத்தில் சில மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்திற்கு ரூ.224.92 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், பேரூராட்சிகளின் இயக்குநர், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும், 16 பேரூராட்சிகளின் பங்களிப்புத் தொகை ரூ.4832.02 இலட்சங்களுக்கும், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் 7 நகராட்சிகளின் பங்களிப்புத் தொகை ரூ.730.68 இலட்சங்களுக்கும் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு விட்டது என்றும், அதேபோல், நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் பல்லடம் நகராட்சிக்கு, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான பங்களிப்புத் தொகை ரூ.944.67 இலட்சங்களுக்கு நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு விட்டதென்றும் தெரிவித்துள்ளதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. இத்திட்டமானது இடைக்கால மக்கட்தொகையின் (2025) தேவையினை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், இதில் தற்போது பயனில் உள்ள, நாளொன்றுக்கு 262.50 மில்லியன் லிட்டருக்காக வடிவமைக்கப்பட்ட இயல்பு நீர் சுரங்க வழிப்பாதை மற்றும் நாளொன்றுக்கு 250 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எடுத்துச் செல்லும் சுரங்க வழிப்பாதையையும் பயன்படுத்தி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நாளொன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீரும், புதிய திட்டத்திற்காக நாளொன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீரும் பெறப்படவுள்ளதென்றும், குடிநீர் தேவையானது, பல்லடம் நகராட்சி மற்றும் 16 பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90% மக்களுக்கு 135 லிட்டர் வழங்கும் விதமாகவும், 10% மக்களுக்கு 70 லிட்டர் வழங்கும் விதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளதென்றும், மீதமுள்ள 7 பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகக் குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் விதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளதென்றும், மேலும் இத்திட்டத்தில் குடிநீர் இழப்பு விகிதம் 15 விழுக்காடுகளாக

எடுத்துக் கொள்ளப்பட்டு குடிநீர் தேவை பின்வருமாறு இறுதி செய்யப்பட்டுள்ளதென்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | விபரம் | மக்கட்தொகை | | மொத்த குடிநீரின் அளவு மில்லியன் லிட்டர் நாள் ஒன்றுக்கு (2025) | பயனில் உள்ளது மில்லியன் லிட்டர் நாள் ஒன்றுக்கு | நீதம் தேவையான குடிநீர் அளவு மில்லியன் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|---|---|
| | | வருடம் 2010 | வருடம் 2025 | | | |
| 1 | பல்லடம் நகராட்சி | 36,850 | 51,750 | 7.648 | 1.863 | 5.785 |
| 2 | 16 பேரூராட்சிகள் | 2,96,000 | 4,06,825 | 60.119 | 15.907 | 44.212 |
| 3 | 7பேரூராட்சிகள் | 1,27,700 | 1,77,900 | 14.321 | 6.860 | 7.461 |
| 4 | 965 ஊரக குடியிருப்புகள் | 5,27,719 | 5,92,641 | 29.494 | 23.450 | 6.044 |
| 5 | தொழிற்சாலைகள் (தற்போது பயனில் உள்ளவை) | -- | -- | 13.416 | 10.950 | 2.466 |
| | மொத்தம் | 9,88,269 | 12,29,116 | 125.00 | 59.03 | 65.97 |

5. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை 2010-11 ம் ஆண்டின் தாவிவா விலைப்பட்டியலின்படி ரூ.22,492 இலட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்பு செலவு ரூ 1,000 இலட்சங்கள் எனவும் கணக்கிடப்பட்டுள்ளதென்றும், விகிதாச்சார மதிப்பீட்டின் தொகை தனி நபர் செலவு மற்றும் 1,000 லிட்டருக்கான குடிநீரின் செலவு ஆகியவை கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | பயனாளிகள் | அமைப்புச் செலவு (ரூபாய் இலட்சங்களில்) | வருடாந்திர பராமரிப்பு தொகை (ரூபாய் இலட்சங்களில்) | 1000 லிட்டருக்கு ஆகும் செலவு (ரூ.) | தனி நபர் செலவு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| I | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | | | | |
| 1) | பல்லடம் நகராட்சி | 1,746.77 | 61.18 | 8.06 | 4,740 |
| 2) | 7 பேரூராட்சிகள் | 1,921.25 | 114.57 | 5.34 | 1,472 |
| II | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் | | | | |
| 3) | 16 பேரூராட்சிகள் | 8,949.67 | 438.84 | 5.41 | 3,024 |
| 4) | ஊரகக் குடியிருப்புகள் (குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் மானியம்) | | | | |
| | 965 ஊரகக் குடியிருப்புகள் | 9,874.31 | 385.41 | 5.94 | 1,871 |
| | மொத்தம் | **22,492.00** | **1,000.00** | **6.08** | **2,276** |

6. இத்திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள பில்லூர் முதலாம் குடிநீர்த் திட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பங்கு தொகையான ரூ.1,083.03 இலட்சங்களும் அடங்கும். பயனாளிகளின் விகிதாச்சாரத் தொகை கீழ்க்கண்டவாறு:-

| வ. எண் | பயனாளிகள் | தொகை (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | பல்லடம் நகராட்சி (UIDSSMT) | 94.96 |
| 2. | 7 பேரூராட்சிகள் (UIDSSMT) | 122.48 |
| 3. | 16 பேரூராட்சிகள் (JNNURM) | 639.41 |
| 4. | 965 ஊரக குடியிருப்புகள் (MNP) | 226.18 |
| | மொத்தம் | 1,083.03 |

7. இத்திட்டத்தினை பணி ஆணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்கவும், அதற்கான நிதி 3 ஆண்டுகள், அதாவது 2010–11 முதல் 2012–13 வரை பகுக்கப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும், இத்திட்டத்தின் மானியத் தொகையான ரூ.9,874.31 இலட்சங்களை குறைந்தபட்ச தேவைத் திட்டம் மற்றும் தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் மூலம் கீழ்க்கண்டவாறு பெறப்படவுள்ளது என்றும் மேலாண்மை இயக்குநர் குறிப்பிடப்பட்டுள்ளார்:-

வருட வாரியாக கு.ப.தே.தி / தே.ஊ.கு.திட்டத்தின் கீழ் நிதி ஆதாரம்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | மான்ய விபரம் | ஊரக பகுதிகளுக்கு தேவையான நிதி | | | |
|---|---|---|---|---|---|
| | | 2010-11 | 2011-12 | 2012-13 | மொத்தம் |
| 1. | குறைந்தபட்ச தேவைத் திட்டம் (தமிழக அரசு) | 585.12 | 2,925.59 | 2,340.47 | 5,851.18 |
| 2. | தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் (மத்திய அரசு) | 402.31 | 2,011.57 | 1,609.25 | 4,023.13 |
| | மொத்தம் | **987.43** | **4,937.16** | **3,949.72** | **9,874.31** |

8. பயனாளிகள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில், திட்டத்தினை செயலாக்கம் செய்யும் ஒப்பந்ததாரரே 5 வருட காலத்திற்கு தொடர்ச்சியாக இயக்கம் மற்றும் பராமரித்தல் செய்ய வேண்டுமென்றும், இயக்கம் மற்றும் பராமரித்தலுக்கு வருடாந்திர செலவு ரூ.10 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதென்றும், முதல் 5 வருடத்திற்கு திட்டத்தினை பராமரிக்கும் பணி, செயலாக்கம் செய்யும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்றும், இயக்கம் மற்றும் பராமரித்தலுக்கான செலவின தொகையை ஒப்பந்ததாரருக்கு 5 வருட காலத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்றும், எனவே, இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கான மதிப்பீட்டுத் தொகை வருடத்திற்கு ரூ.10கோடி வீதம் முதல் 5 வருட காலத்திற்கான ரூ.50 கோடிக்கு தனியாக நிர்வாக ஒப்புதல் அரசிடம் பெறவும், இயக்கம் மற்றும் பராமரிப்பின்போது பயனாளிகளிடமிருந்து பெறப்படும் குடிநீர் கட்டணத்திற்கும் பராமரிப்பு செலவிற்கும் இடையிலான பணத்தேவையினை அரசிடமிருந்து

மான்யமாகப் பெற்றுக் கொள்ளவும், பராமரிப்புக் காலத்தில் ஏற்படும் மின் கட்டண உயர்வு மற்றும் விலையேற்றம் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்றும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வழிமுறையின்படி, இயக்கம் மற்றும் பராமரிப்பு 5 வருட காலத்திற்கு தனியாக அரசிடம் நிர்வாக ஒப்புதல் பெறவும், பயனாளிகளிடமிருந்து பெறப்படும் குடிநீர் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவிற்கு இடையிலான பணத்தேவையினை அரசிடமிருந்து மான்யமாகப் பெற்றுக் கொள்ளலாமென்றும், ஒப்பந்ததாரரின் 5 வருட கால பராமரிப்பு காலம் முடிந்ததும் இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படுமென்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

9. மேலே பத்தி 7 மற்றும் 8–ல் கூறப்பட்டுள்ள இத்திட்டத்தின் கருத்துருக்கள் 6.7.2010 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் இத்திட்டம் வாரியத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு வாரியம் தனது 6.7.10ம் நாளிட்ட தீர்மான எண்.2.11ல் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவிற்கு அனுப்பியது. வாரியத்தின் பரிந்துரையின் படி அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு தனது 14.7.10ம் நாளிட்ட தீர்மான எண்.4ல் வாரியத்தின்பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்து அரசின் நிர்வாக ஒப்புதல் பெற பரிந்துரைத்துள்ளது.

10. எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கு பில்லூர் நீர்த்தேக்கத்தினை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்லடம் நகராட்சி மற்றும் 23 பேரூராட்சிகளுக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் (UIDSSMT) மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM) ஆகியவற்றின் கீழ் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டுள்ளதாலும் 965 ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்த பட்ச தேவைத் திட்டம் (MNP) மற்றும் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் (NRDWP) கீழ் 100 சதவீத அரசு மான்யம் பெற இருப்பதாலும் கீழ்க்கண்ட இனங்களுக்கு அரசின் நிர்வாக ஒப்புதலைக் கோரியுள்ளார்: -

1. பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 8 ஒன்றியங்களை சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.224.92 கோடி அமைப்பு செலவு எனவும், ரூ.10 கோடி ஆண்டு பராமரிப்பு செலவு எனவும், தனிநபர் செலவு விகிதம் ரூ.2,276/– எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.6.08 எனவும் கணக்கிடப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறுதல்;
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களும் கேட்டுக் கொண்டபடி, இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தினை, நகர உள்ளாட்சிகளின் பங்குத் தொகையாக (16 பேரூராட்சிகளின் பங்களிப்பு ரூ.4832.02 இலட்சம், 7 நகராட்சிகளின் பங்குத்தொகை ரூ. 730.68 இலட்சம் மற்றும் பல்லடம் நகராட்சியின் பங்குத் தொகை ரூ. 944.67 இலட்சம் பெற்று இந்த குடிநீர் மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்த அரசின் அனுமதி பெறுதல்;

3. இத்திட்டத்தின் ஊரக பகுதிகளின் கட்டமைப்பிற்கான விகிதாச்சாரத் தொகையான ரூ.98.74 கோடியினை குறைந்த பட்ச தேவை திட்டத்தின்/ தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் (100% மானியமாக ) அரசிடமிருந்து பெற அரசுக்கு பரிந்துரை செய்தல்;
4. மேலும்,

(அ) திட்டத்தினை செயலாக்கம் செய்யும் ஒப்பந்ததாரரையே முதல் 5 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்தல்

(ஆ) இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான 5 ஆண்டு தொகையான ரூ.50.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கவும் பராமரிப்பின்போது பயனாளிகளிடமிருந்து பெறப்படும் குடிநீர் கட்டணத்திற்கும் பராமரிப்பு செலவிற்கும் இடையிலான பணத் தேவையினை அரசிடமிருந்து மான்யமாகப் பெற்றுக் கொள்ளவும், பராமரிப்புக் காலத்தில் ஏற்படும் மின் கட்டண உயர்வு மற்றும் விலைபேற்றம் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசுக்கு பரிந்துரை செய்தல்

11. மேற்கூறிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்த பின் அதனை ஏற்றுக் கொள்ள அரசு தீர்மானித்து, அதன்படி கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கு பில்லூர் நீர்த்தேக்கத்தினை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்லடம் நகராட்சி மற்றும் 23 பேரூராட்சிகளுக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் (UIDSSMT) மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM) ஆகியவற்றின் கீழ் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டுள்ளதாலும் 965 ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்த பட்ச தேவைத் திட்டம் (MNP) மற்றும் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் (NRDWP) கீழ் 100 சதவீத அரசு மான்யம் பெற இருப்பதாலும்,

1. பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 8 ஒன்றியங்களை சேர்ந்த 965 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவாக ரூ.224.92 கோடி எனவும், ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.10 கோடி எனவும், தனிநபர் செலவு விகிதம் ரூ.2,276/— எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவாக ரூ.6.08 எனவும் கணக்கிட்டு இத்திட்டத்தினை நிறைவேற்றவும்
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களும் கேட்டுக் கொண்டபடி, இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தினை, நகர உள்ளாட்சிகளின் பங்குத் தொகையாக (16 பேரூராட்சிகளின் பங்களிப்பு ரூ.4832.02 இலட்சம், 7 நகராட்சிகளின் பங்குத்தொகை ரூ. 730.68 இலட்சம் மற்றும் பல்லடம் நகராட்சியின் பங்குத் தொகை ரூ. 944.67 இலட்சம்) பெற்று இந்த குடிநீர் மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்தவும்,
3. இத்திட்டத்தின் ஊரக பகுதிகளின் கட்டமைப்பிற்கான விகிதாச்சாரத் தொகையானரூ.98.74 கோடியினை குறைந்த பட்ச தேவை திட்டத்தின்/

தேசிய ஊரக குடிநீர்த்திட்டத்தின் கீழ் (100% மானியமாக ) பெற பரிந்துரை செய்தும் அரசு ஆணையிடுகிறது:-

4. மேலும்,

(அ) திட்டத்தினை செயலாக்கம் செய்யும் ஒப்பந்ததாரரையே முதல் 5 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்வதற்கும்

(ஆ) இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான 5 ஆண்டு தொகையான ரூ.50.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும் பராமரிப்பின்போது பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் குடிநீர் கட்டணத்திற்கும் பராமரிப்பு செலவிற்கும் இடையிலான பணத் தேவையினை அரசிடமிருந்து மானியமாகப் பெற்றுக் கொள்ளவும், பராமரிப்புக் காலத்தில் ஏற்படும் மின் கட்டண உயர்வு மற்றும் விலையேற்றம் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவும் வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம், திருப்பூர்.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2/குவ2/குவ3/குவ4/வ செ)துறை, சென்னை–9
இகோ / உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.